# தெரிவுக்குழு வடக்கே செல்லவேண்டும்

(கொழும்பு)
நாடாளுமன்றத் தெரிவுக் குழு வடக்கே சென்று விடுதலைப் புலிகளைச் சந்திப்பதன் மூலம் இனப் பிரச்னைத் தீர்வுக்குச் சாதகமான ஒரு சூழ்நிலை தோன்றுமெனக் கொழும்பு வாரப் பத்திரிகை ஒன்று கருத்துத் தெரிவித்துள்ளது. (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

யாழ்ப்பாண பொதுநூலகம்

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY
மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 6 இதழ் 38
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 19 — 03 — 1992

## 22 ஆட்லறி ஷெல்கள் வடமராட்சியை தாக்கின

(வடமராட்சி)
வடமராட்சி பகுதி நோக்கி நேற்றுமுன்தினமிரவு மாத்திரம் 22 ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டதில் பல வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. செவ்வாய்க்கிழமை இரவு (4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ தளபதி மணலாறுக்கு விஜயம்

(கொழும்பு)
இலங்கை இராணுவ தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன வட பகுதி இராணுவ தளபதி ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ சகிதம் நேற்றுக் காலை மணலாறுப்பகுதிக்கு அவசர விஜயமொன்றை மேற்கொண்டார். (4-ம் பக்கம் பார்க்க)

★ மணலாறில் போர் தொடர்கிறது

# 41 படையினர் உயிரிழப்பு

# ஆறு கனரக வாகனம் தகர்ப்பு

## 80 இராணுவம் படுகாயம்

(மணலாறு)
**மணலாறு கொக்குத்தொடுவாய்ப் பகுதியில், விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்துக்கும் இடையில் கடந்த 36 மணித்தியாலங்களாகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் உக்கிர மோதலில், இதுவரை 41 படையினர் உயிரிழந்துள்ளனர். 80க்கும் அதிகமான படையினர் படுகாயம் அடைந்துள்ளதுடன் 6 கனரக வாகனங்களையும் புலிகள் அழித்துள்ளனர்.**

இராணுவத்தினருக்கு உதவியாக குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிகொப்டர்களும் கடல் பகுதிகளிலிருந்து கடற்படையினரின் பீரங்கித்தாக்குதல்களின் மத்தியிலும் விடுதலைப்புலிகளின் சளைக்காத சாமர்த்தியமான உக்கிரத் தாக்குதல்களினால் இராணுவத் தரப்பினருக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டு வருவதாக கூறப்படுகின்றது.

நேற்றைய சண்டையில் 6 கனரக வாகனங்கள் தகர்த் (4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஜீப்பை புலிகள் கைப்பற்றினர்

(கொழும்பு)
மணலாறு பகுதியில் இராணுவத்தினரின் ஜீப் ஒன்றை விடுதலைப்புலிகள் கைப்பற்றியிருக்கலாமென இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்,

இந்த மோதலில் இராணுவத்தினரின் ஜீப் ஒன்று நேற்றுமுன்தினம் காணமல் போய்விட்டதாக நேற்று மாலை இராணுவ பேச்சாளர் கேர்ணல் சரத்முனசிங்கா தெரிவித்தார். (மா-சி)

## விமானப்படை, கடற்படை முல்லையில் கொடூர தாக்குதல்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு-மணலாறு பகுதியில் விமானப்படை விமானங்களும், கடற்படை பீரங்கிகளும் மிகஅகோரமாக தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

கடந்த 36 மணி நேரமாக சுமார் 10 குண்டு வீச்சு விமானங்களும் முல்லைத்தீவு கடற்பரப்பிலிருந்து 6ற்கும் மேற்பட்ட பீரங்கிப் படகுகளும் தொடர்ச்சியாக தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

விமானக்குண்டு வீச்சு சத்தமும், பீரங்கித் தாக்குதலும் பலமைல் தூரங்களுக்கு அதிர்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன, (சி-56)

## மணலாறு பகுதியில் 'ஒபரேஷன் ஹயபாற'

(கொழும்பு)
மணலாறில் தற்போது நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கைக்கு 'ஒபறேஷன் ஹயபாற' என பெயரிடப்பட்டுள்ளது.

சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நவீன ரகரி-85, ரி-86ரக டாங்கிகளும் கவசவானங்களும் சுமார் 5000 படையினரும் இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

புதிய ஜெட் ரக குண்டு வீச்சு விமானங்களும் தாக்குலை நடாத்தி வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

★ தனியார் பஸ்சை வழிமறித்து

## முஸ்லிம் படை குண்டுவீச்சு 3 தமிழர்; ஒரு சிங்களவர் பலி

(கொழும்பு)
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில் நேற்றுக்காலை முஸ்லிம் ஊர் காவற்படையினர் தனியார் பஸ் ஒன்றின் மீது கைக்குண்டு வீசியதில் 4 பயணிகள் ஸ்தலத்தில் கொல்லப்பட்டார்கள் 18 பயணிகள் காயமடைந்தார்கள். 2 தமிழ் பெண்கள் கடத்தப்பட்டனர்.

ஸ்தலத்தில் கொல்லப்பட்ட பஸ்பயணிகள் நால்வரில் மூவர் தமிழர் என்றும் ஒருவர் சிங்களவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 6.45 மணியவில் இச்சம்பவம் இடம் பெற்றது. ஆரைபற்றிலிருந்து (4-ம் பக்கம் பார்க்க)

## நிறவெறிக் கொள்கைக்கு தெ. ஆபிரிக்காவில் முற்றுப்புள்ளி?

(ஜோகனஸ்பேர்க்)
தென்னாபிரிக்காவில் நிறவெறிக் கொள்கைக்கு முடிவு கட்டும் அரசியல் அமைப்புச் சட்டங்களைத் திருத்தஞ்செய்ய (4ம் பக்கம் பார்க்க)

## புலிகளை ஆதரித்து சேலத்தில் பேரணி

(சென்னை)
சேலத்தில் அண்மையில் நடைபெற்ற ஒரு மாநாட்டிலும், பேரணியிலும, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கோஷங்கள் எழுப்பப்பட்டன. அந்த மாநாட்டிலும், ஊர்வலத்திலும் முதலமைச்சர் ஜெயலலிதாவையும், (4-ம் பக்கம் பார்க்க)

## பஞ்சாப் சட்டசபையில் முதல்நாளே அடிதடி

(சண்டிகார்)
பஞ்சாப் மாநிலத்தில் நேற்று நடைபெற்ற புதிய சட்டசபையின் கூட்டத்தில் அடிதடி சண்டை நடைபெற்றது.

சட்டசபையைத் தொடக்கி (4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை திரும்ப அகதிகள் மறுப்பு

(லண்டன்)
இந்தியாவிலிருந்து இலங்கை திரும்ப முன்னர் விருப்பம் தெரிவித்திருந்த 30 ஆயிரம் தமிழ் அகதிகளில் 15 ஆயிரம் பேர் தற்போது நாடு திரும்பமறுத்துள்ளனர்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் தொடர்ந்தும் போர் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக (4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு பொதுவான தீர்வு - ஜனாதிபதி அறிவிப்பு

[கொழும்பு]
வடக்கு கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இவ்வாறு கூறினார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற மதவைபவமொன்றில் கலந்து கொண்டபின் உரையாற்றிய ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது.

வடக்கு கிழக்கு பிரச்னைக்கு ஒரு பொதுவான தீர்வைக் காண்பதற்கு முன்வந்துள்ளேன்.

நாடாளுமன்ற தெரிவுக் குழுவும் இதுசம்பந்தமாக (4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### விற்பனைக்கு

ரான்சிஸ்ரர்கள், I C கள், டயோட், பற்றி சார்சர்கள் மலிவுவிலையில் விற்கப்படுகின்றன. Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, (றெயில்வேகடவையருகாமை) யாழ்ப்பாணம், (எ—1983)

### பாகற்காய் குழிகை

சலரோக நோயைக் கட்டுப் படுத்தக்கூடிய Krawila Capsules. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-5995)

### வரலாறு ஆண்டு 10

புதிதாக வெளியிடப்பட்ட அரசாங்கப் பாடநூலுக்கமைய வினா – விடைகளாக பயிற்சிகளுக்கான விடைகளையும் கொண்டதாக வரலாறு ஆண்டு 10 குறிப்புகள் வெளிவந்துள்ளது. ஆக்கம்: நா. மயில்வாகனம். (சி 6072)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர்நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 6040)

### இன்று
### செவ்வாய் மாற்றம்

வியாழனையும், சனி பங்குனிச் சூரியனையும் நோக்குவதால் வெப்பம், நிலநடுக்கங்கள், விஷவாயுக்கள் குண்டு வெடிப்புக்கள் தாக்குதல்கள் அதிகரிக்கும். புத்தாண்டில் மீண்டும் அமைதி. திரு. சத்தியதாசன், சோபிதா, யாழ்ப்பாணம். (சி 6070)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைக்காலவியல், சரும நோய்கள், மாதவிடாய் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்கள், பிரபலமானவர் சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர். வேலணை வைத்தியர் சி.இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-6030)

### புலமைப் பரிசில் வினாத்தாள்

1991-ம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் வினாத்தாள் ஒவ்வொரு சனியும் வெளியிடப்படும். தொகையாக வினாத்தாள் பெறுவோர் முற்கூட்டியே பதிவு செய்தால் விஷேட கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- நிர்வாகி, புதிய கல்விநிலையம், 219, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். (சி-9073)


## தாளவாத்திய போட்டி

(உடுவில்)

இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையினர் காலஞ்சென்ற தவில் மேதை இணுவில் என். ஆர். சின்னராசாவின் ஞாபகார்த்தமாக மிருதங்க தாளவாத்தியப் போட்டிகளை நடாத்தவுள்ளனர்.

இப்போட்டியில் தனியாகவும், குழுக்களாகவும் பங்குபற்றும் போட்டியாளர் தமது விண்ணப்பங்களை மே மாதம் முதலாம் திகதிக்கு முன் இணுவில் கந்தசுவாமி கோவில் இளம்தொண்டர் சைவப் பணிமனையில் சமர்ப்பிக்குமாறு சபையின் செயலாளர் அறிவித்துள்ளார், (109)


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## ஓராண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை

### செபமாலை மரியதபேந்திரன்

(சுந்தர்)

**வீரஜனனம்: 12.10.1971 வீரமரணம்: 19.03.1991**

நெருப்புப் புயலாய்ச் சீறிப்பாய்ந்து எதிரிப்படைகளை உதிரக் கடலில் மூழ்கடித்து, மண்ணின் விடிவுக்காய் இன்னுயிர் ஈந்த வீர காவியமே! எமது இதய வானில் உதய நிலவாய் ஒளிர்ந்துலவும் பாச ஓவியமே! உங்கள் பிரிவால் எங்கள் உள்ளம்தோறும் சோக வெள்ளம் பொங்கிப் பிரவாகிக்கும்! உங்கள்தியாகத்தின் சுவடுகளை பற்றிநின்று, விடுதலை உணர்வில் விளைந்த உங்கள் ஆத்மா சாந்தி அடைய எங்கும் நிறைபொருளான இறை பதங்களை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

தாய், சகோதரர்கள், பெரியதாயும் பிள்ளைகளும், மாமன்மார், மைத்துனர்கள், மைத்துனிமார், உறவினர், நண்பர்கள்.

7/1, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி 6068)


## இராசிபலன்

**19/03/1992**

**வியாழக்கிழமை**

**(தமிழுக்கு பங்குனி 06)**

பிரதமை மு.இ, 10–54வரை உத்தரம் மு. ப. 9–31 வரை. மரணயோகம். கரிநாள். இராகுகாலம் பகல் 1-48 முதல் 3–18வரை. சுபநேரம் காலை 7–48 முதல் 9-18 வரை.

மேடம்: அந்தஸ்து உயர்வு, குடும்பநலம். சூழ்நிலை சாதகம்.

இடபம்: மேலதிகாரிகள் துன்பம், எதிர்ப்புக்கள், மனக்கவலை.

மிதுனம்: காரிய தாமதம், தொழில் குழப்பம், விவாதம்.

கடகம்: பெரியோர் ஆசி, தெய்வ அனுகூலம், நூதன முயற்சி.

சிங்கம்: பொருள் நஷ்டம், விதண்டாவாதம், பயனற்ற செய்கை.

கன்னி: நல்லோர்சேர்க்கை, குடும்ப சுபீட்சம், செலவு.

துலாம்: மனச்சஞ்சலம், அந்நியர் பகை, அலைச்சல்.

விருச்சிகம்: வெற்றி வாய்ப்பு, காரிய வெற்றி, சினேக உதவி.

தனுசு: உடல் ஆரோக்கியம், சகோதர உதவி, மனஅமைதி,

மகரம்: மேலதிகாரிகள் துன்பம், குடும்பப் பிரிவு. வேலைப்பழு.

கும்பம்: நோய் உபாதை, மாமனார் தொல்லை, பயம்.

மீனம்: கற்பனை மிகுதி, வியாபார மேன்மை. பயணம்.

- ஜோஸ்யர்

## இன்று

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் வரையப்பட்டிருக்கும் தமிழீழதாயகம் படத்தினை திரைநீக்கம் செய்யும் எழுச்சி நாளாக மார்ச் 19-ம் திகதி இன்று தமிழீழம் எங்கும் கொண்டாடப்படவுள்ளதாக தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இன்றுகாலை 9–00 மணிக்கு சகல பாடசாலைகளிலும் தேசியக்கொடி ஏற்றலும் 9-10 க்கு படத்தினை திரைநீக்கம் செய்தலும் 9-15 க்கு தமிழீழ கைநூல் விளக்க உரையும் 9–30 க்கு சொற்பொழிவுகளும் நிகழ்ச்சி முடிவில் தேசியக் கொடி இறக்கலும் நடைபெறும். [சி]

ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடாத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள் வருமாறு:

உதைபந்தாட்டம்: உரும்பிராய் சென். மைக்கல்அணியை எதிர்த்து சரஸ்வதி அணி மோதும். இப்போட்டி பி. ப. 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும்.

ஃ ஃ

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 19ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் வித்தியாலய அதிபர் சைவப்புலவர் நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட சிரேஷ்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. க. மகேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார். (139)

ஃ ஃ

(உடுவில்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றிய வருடாந்த மதியபோசன விருந்துபசாரவைபவம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

மாணவர் ஒன்றிய தலைவர் செல்வன் கே. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (109)

## தமிழ்நாட்டிலிருந்து 1056 அகதிகள் திருமலை திரும்பினர்

(கொழும்பு)

தமிழ்நாட்டிலிருந்து 14வது தொகுதி இலங்கைதமிழகதிகள் நேற்று முன்தினம் திருகோணமலை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்துள்ளதாக புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு.கிறிஸ்ரி டி சில்வா தெரிவித்தார்,

இத்தொகுதி அகதிகளில் 1056பேர் அடங்கியுள்ளனர். இதேவேளையில் அண்மையில் இலங்கைக்கு வந்த ஐ. நா, சபையின் அகதிகள் விவகாரங்களுக்குத் தொடர்பான செயலகத்தின் தூதுக் குழுவினர் இன்னும் சில தினங்களில் தமது அறிக்கையினை தலைமை அலுவலகத்திற்கு சமர்பிக்க விருப்பதாகவும் புனர்வாழ்வு அமைச்சின்செயலாளர்மேலும் தெரிவித்தார், (மா)

## நாடுதிரும்பிய 9 தமிழ் அகதிகள் படையினரால் கைது

(மன்னார்)

தமிழகத்திலிருந்து நாடு திரும்பி பேசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிககளில் ஒன்பது பேரை இலங்கை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

விசாரணைக்குப் பின்பு இருவரைத் தொடர்ந்து தடுத்து வைத்திருப்பதனால் இலங்கைக்கு வந்துள்ள அகதிகள் மத்தியிலும், இந்தியாவில் தற்போது இருக்கும் இலங்கை அகதிகள் மத்தியிலும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது, (சு)

## குடிநீர் விநியோக ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை நீர் விநியோகத்தை மீண்டும் ஏற்படுத்த ஜெனரேட்டர்கள் கொள்முதல் செய்ததற்கும், அதற்கான எரிபொருள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் எடுத்துவரவும் அரசாங்கத்திடம் அனுமதி கோரியுள்ளது.

இதற்கான திட்டம் அரசாங்க அதிபர் மூலம் உள்ளூராட்சி அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. [எஸ்]

## அதிகாலையிலிருந்து செய்திகளும் தகவல்களும்

(கொழும்பு)

அரசாங்க தகவல் திணைக்களம் தினமும் அதிகாலை 4-30 மணியிலிருந்து செய்திகளையும் தகவல்களை வழங்கிவருகிறது.

மக்களுக்கும் பத்திரிகைகளுக்கும் உடனுக்குடன் விபரங்களை அறியத்தருவதே இந்த ஏற்பாட்டின் நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே)

## பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

மாகோ பகுதியில் பல கொள்ளைச்சம்பவங்களிலும், வன்முறைச் சம்பவங்களிலும் தொடர்புடையவர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் மாகோ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (சி)

## காவல்துறை வேண்டுகோள்

(வடமராட்சி)

அண்மைக் காலங்களில் பல வாகன விபத்துகள் யாழ். குடா முழுவதும் நடைபெற்று வருகின்றன. இதற்கான காரணங்கள், வீதி ஒழுங்கு புரியாமை, சிலர் அத்துமீறிச் செல்லல், முக்கியமாக வயது குறைந்தவர்கள் உயரம் காணாதிருந்தும் சைக்கிள், மோட்டார்சைக்கிள் ஓட்டிச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது,

அண்மைக் காலத்தில் யாழ். நகரில் 12 வயதுச் சிறுவன் ஒருவன் 60 வயது மதிக்கத்தக்க வயோதிபரொருவரை ஏற்றிச் சென்று மினிபஸ் ஒன்றுடன் மோதி யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு வயோதிபர் இறந்துள்ளார்,

ஆகவே இப்பேர்ப்பட்ட விபத்துகளைப் பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ளும்படி காவல் துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர், (51)

## சுயமுயற்சி வேலைத்திட்டம்

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி மாவட்டத்தில் துணுக்காய் பாண்டியன்குளப் பிரதேசத்தில் விநாயகபுரம் கிராமிய உற்பத்திக் குழு சுயமுயற்சி வேலைத் திட்டத்தின் கீழ் சிந்து பால் வெல்லத்தையும் இனிப்பு வகைகளையும் பசும் பாலில் இருந்து தயாரித்து வருகிறது.

இதன் மூலம் கால்நடை வளர்ப்போர் பாலைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளைப் பெற்றுள்ளதுடன் பலர் வேலை வாய்ப்பினையும் பெற்றுள்ளனர்.

## நெல்விளைச்சல் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சென்ற ஆண்டு காலபோகத்தில் மழை வீழ்ச்சி குறைந்ததின் காரணமாக நெற்செய்கை பெரிதும் பாதிப்படைந்த போதிலும் புழுதி விதைப்பபை மேற்கொண்டவர்கள் கூடுதலான விளைச்சலைப் பெற்றுள்ளார்கள். இங்கு சிறுகுளங்கள், கால்வாய்கள் உற்பத்திக் குழுக்களால் புனரமைக்கப்பட்டதன் பயனாக 115 ஏக்கர் புதிதாக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டது.

இங்கு இவ்வாண்டு சிறுதானிய விளைச்சலிலும் பார்க்க நெல்லின் விளைச்சல் கூடுதலாகப் பெறப்பட்டுள்ளது.

## தொண்டர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களின் பிரச்னைகள், எதிர்காலத்தைய போராட்டங்கள் பற்றிஆராய்வதற்கான தொண்டர் ஆசிரியர்களின் கூட்டம், யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## வினாவிடைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கணித, விஞ்ஞான பாட வினாவிடைப்போட்டி இம்மாதம் 21ம் திகதி ஆண்டு 11, 7, 6 க்கும், 22ம் திகதி ஆண்டு 10, 9, 8 க்கும் யாழ். மாவட்ட அடிப்படையில் காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். [சு]

நல்லூர் கிளை நூலகம் மாநகர் ... யாழ்ப்பாணம்

★ தியாகத்தாய் அன்னை பூபதியின் நினைவுதினம் இன்று ஆரம்பம்:

# "இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் 30 நாட்கள் அந்த மெழுகுவர்த்தி உருகியது"

(யாழ்ப்பாணம்)

அன்னைபூபதியின் நினைவு நாட்களான இன்று முதல் ஏப்பிரல் 19ம் தேதி வரையான காலங்களில் வாசல் தோறும் அன்னை பூபதியின் திருவுருவைவைத்து வடிவு செய்து அடையாளப்படுத்த ஒருநாளாவது உண்ணுவிரதமிருந்து அன்னை பூபதியை நெஞ்சில் இருத்துங்கள். ஓர் இடத்தில் ஒருவருக்கொருவர் அந்தநாள் நினைவுகளை பரிமாறிக்கொள்ளுங்கள்.



தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் பிரிவு அன்னை பூபதி நினைவு நாட்கள் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இந்திய ஆக்கிரமிப்பாளர்கள், எம் அன்னை பூமியை அள்ளி விழுங்கிட நின்ற அந்த நாட்களை எண்ணிப்பாருங்கள். எங்கள் தாய் மண், மேலாதிக்கவாதிகளின் கொடூர நெருப்பில் கொதித்துக் கொண்டிருந்த காலத்தை நினைத்துப்பாருங்கள். அந்த நினைவுகள் இன்றும் கூட உங்கள் நெஞ்சுகளில் நெருப்பு மூட்டும்.

இந்த நேரத்தில்தான் பூபதி அம்மா போராடினார். 15-03-1988 அன்று மட்டுநகரில், மாமாங்க வீதியில், குருந்தமர நிழலில் மேடையிட்டு உண்ணுநோன்பேற்றார்.

சண்டையை நிறுத்து! புலிகளோடு பேசு! ஏற்கக்கூடிய நிபந்தனைகளைத்தான் அம்மா இந்திய அரசுக்குப் போட்டார். ஆதிக்கவாதிகள் அம்மாவின் நிபந்தனைகளை அலட்சியம் செய்தனர். பயமுறுத்திப் பணியவைக்கப் பார்த்தனர். நெருக்குவாரங்களைக் கொடுத்துப் போராட்டத்தை நிறுத்திவிட முயன்றனர். புயலுக்கு திரை போட்டுப் பார்த்தார்கள். காட்டுத்தீயைக் கையால் மூடப்பார்த்தார்கள். தோற்றுப்போனது இந்திய அரசு. முப்பது நாட்கள் இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும்அந்தமெழுகுவர்த்தி உருகியது.

19-04-1988 அன்று அன்னை பூபதி தமிழீழத்தின் ஒட்டுமொத்தமான குரலாக பாரத அரசுக்கு பாடமொன்றைச் சொல்லிவிட்டுத் தன்மூச்சை நிறுத்திக்கொண்டார். அந்நியர்கள் இந்த மண்ணை ஆக்கிரமிச்சு வந்தால் இந்தமண் அடங்கிப் போகாது, பணிந்து போய்ப்பார்த்துக் கொண்டிருக்காது.

இந்தமண் போராடும், என்றபாடத்தைப் புகட்டிவிட்டு அந்தப் புகழுடம்பு பேச்சிழந்துபோனது. அன்னை பூபதி தியாகத்தின் தோற்றப்பாடானாள். இக்காலத்தில் மட்டுமல்ல இனி எக்காலத்திலும் மனங்களில் இருந்து மறைய முடியாத அன்னை பூபதியை இவ்வருடமும் நினைவிற்கொள்ள நாம் அனைவரும் தயாராகுவோம்.

---

நல்லூர்ப் பகுதியில்

## சுற்றுடல் சுகாதாரம் பேணுவதற்கு ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

தியாகத்தாய் அன்னை பூபதியின் நினைவாக இன்று 19-ம் திகதி முதல் நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் சுற்றுடல், சுகாதாரம் பேணும் நடவடிக்கைக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 25ம் திகதிக்குள் வீடுகளில், அலுவலகங்களில் உள்ளாகவும் வீதியோரங்களிலும் காணப்படக்கூடிய கழிவுகளையும் குப்பைகளையும் பற்றைக் காடுகளையும் அழிப்பதோடு அகற்றமுடியாத கழிவுகள் குப்பைகள் போன்றவற்றை வீதி ஓரங்களில் குவித்து வைத்து 26 ந் திகதிமுதல் அவற்றை அகற்றுவதற்கு உதவும்படியும் ஒலிபெருக்கி மூலமாகவும் ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் துண்டுப்பிரசுரங்களை நேரடியாக விநியோகிப்பதன் மூலமும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ஏற்பாட்டை மேற்கொண்டுவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு இவ்விடயத்தில் ஒவ்வொரு தமிழ்மகனும் உணர்வு பூர்வமாக சிந்தித்து தனது சுற்றுடலை சுத்தமாக வைத்திருப்பதன்மூலம் எமது மண்ணில் நீண்டநாள் தாக்கத்தை ஏற்படுத்தவல்ல சுகாதாரக் கேடுகளைக் களைந்து ஆரோக்கியமான சமுதாயம் வாழும் அழகான தேசமாக மலரவைக்க உதவுமாறு கேட்டுள்ளது. வடிகால்கள், கிணறுகள் பிரதேசசபை சுகாதாரப் பகுதியினரின் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்படும் இந் நடவடிக்கை ஒவ்வொரு பகுதியாக விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் அறிய வருகின்றது.

---

★ சக்திவாய்ந்த குண்டு வெடித்து

## ஆஜன்ரீனு தலைநகரிலுள்ள இஸ்ரேல்தூதரகம்தரைமட்டம்

### 10 பேர் பலி; 100 பேர் படுகாயம்

[போனஸ் அயர்ஸ்]

ஆஜன்ரீனுவின் தலைநகர் போனஸ் அயர்ஸில் நேற்றுமுன்தினம்மாலை சக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்ததில் இஸ்ரேலிய தூதரகம் தரைமட்டமானது. இதன்போது 10க்கு மேற்பட்டோர் பலியாகியும் 100க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துமுள்ளனர்.

குடியிருப்புப் பகுதியில் அமைந்திருந்தஇஸ்ரேலியதூதரகத்தின் ஐந்து மாடிகளில் நாலு மாடிகள் இடிந்து நாசமாகியுள்ளன.

குண்டு வெடிப்பின்போது அங்கு இருந்தோரின் தொகை எவ்வளவு என்று தெரியவில்லையென்றும், மதிப்பீடு எடுக்கப்படுவதாகவும் ஆர்ஜன்ரீனு பொலிசார் தெரிவித்தனர்.

மீட்புப் படையினர் இதுவரை 10 சடலங்களையே மீட்டுள்ளனர். மேலும் சிலர் இடிபாடுகளுள் சிக்கியிருக்கலாம் என்ற நோக்கில் மீட்புவேலை வெகு துரிதமாக நடைபெறுகிறது.

வெடிகுண்டு தூதரகத்தினுள் வைக்கப்பட்டதா? வெளியில் வைக்கப்பட்டதா? என்பது தெரியவில்லை.

இக்குண்டு வெடிப்புக்கு காரணமானவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படுமென்றும், இதற்காக நாட்டிலிருந்து தீவிரவாதிகளோ மதவாதிகளோ தப்பிச் செல்லாத வகையில் துறைமுகங்கள், விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது. மத அடிப்படைவாதிகளால் இக்குண்டு வெடிக்கப்பட்டதாக ஆஜன்ரீனு அதிபர் கார்லோஸ் மெனின் குற்றஞ் சாட்டியுள்ளார். வேறு விபரம் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார். (கே)

---

## "கல்வியை சீர்குலைக்க அரசு முயலுகிறது"

(வடமராட்சி)

எமது கல்வியின் மூலம் நாம் அடையும் திறமைகளை சர்வ உலகமும் அறியும். இதைப் பல வழிகளிலும் சீர்குலைக்க ஸ்ரீலங்கா அரசு முயன்றுவருகின்றது என்று விடுதலைப் புலிகள் ம. மு. யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி, நடராஜ இராமலிங்க வித்தியாலய மெய்வல்லுனர் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார்.

அவர் மேலும்கூறியதாவது: நாம் ஒரு முழுமையான மனிதனை உருவாக்கவேண்டுமானால் அவனுக்கு உளவளர்ச்சி, உடல்வளர்ச்சி முழுமையாக அளிக்கவேண்டும். அவற்றை கல்விக் கூடங்கள் மூலமாகவே அளிக்கமுடியும்.

இன்று நாம் பூரணமாக வளராவிட்டாலும் உலகத்தையும் எமது போராட்டத்தையும் புரிந்துகொள்ளக்கூடிய கல்வி அறிவினையும் போராட்ட வளர்ச்சியையும் அடைந்துள்ளோம். இக் கல்வியறிவினை மங்குமடிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு பொருளாதாரத்தடை, மின்சாரத் தடை, யுத்தம் போன்ற வழிகளை பயன்படுத்திவருகின்றது.

இவற்றினை எமது மக்களின் ஒத்தாசையுடனும் ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் மூலமும் ஸ்ரீலங்கா அரசின் முட்டுக்கட்டைகளை உடைத்தெறிந்து பூரணமான சமுதாயத்தினை உருவாக்குவது அவசியம் என்றார்.

மெய்வல்லுநர் போட்டிக்கு வித்தியாலய அதிபர் திரு. சு. முத்துக்குமாரசாமிதலைமை வகித்தார். (51)

---

## நிவாரண மோசடி

[யாழ்ப்பாணம்]

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியான சேவை வழங்கும் பொறுப்பைக்கொண்ட கிராமத்தின் சேவையாளர் ஒருவரும், சிற்றூரவைத் தலைவர் ஒருவரும் சேர்ந்து நீண்ட காலமாக மேற்கொண்டுவந்த நிவாரணமோசடி மக்களின் இரகசிய தகவல்களின் விளைவாக அம்பலத்துக்கு வந்துள்ளது.

---

தமிழ்நாடு பொலிஸ் பிரிவு:

## 80 கோடி ரூபா செலவில் நவீனமயமாக்கப்படும்

(சென்னை)

தமிழ்நாடு பொலிஸ் பிரிவு 80 கோடி ரூபா செலவில் நவீனமயப்படுத்தப்படவுள்ளதாக செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

தீவிரவாதிகளை ஒடுக்கும் நோக்குடன் இச் செயற்பாடுகள் இருக்குமெனவும் அவர் கூறினார்.

தமிழ்நாடு பொலிஸ் பிரிவு, நவீனமயமாக்கப்பட்டதும், நாட்டிலேயே மிக நவீனமானதும், மிகச் சிறப்பான ஆயுதங்களும், சாதனங்களும் கொண்டதாக விளங்கும் என்றும் அவர் கூறினார். [கே]

---

## தரம்குறைந்த ரின் மீனுக்கு தடை

(கொழும்பு)

பாவனைக்கு உதவாத பெருமளவு ரின்மீனுக்கு அரசு தடைவிதித்துள்ளது.

அண்மையில் பாவனைக்கு உதவாத பெருமளவு ரின் மீன்கள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

---

## இலங்கை கிரிக்கெட் அணி நாடு திரும்புகிறது

[கொழும்பு]

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ள அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து நாடுகளுக்குச் சென்ற இலங்கை கிரிக்கெட் அணி இன்று வியாழக்கிழமை நாடு திரும்புகிறது.

மேற்படி போட்டியில் இலங்கைஅணி அரை இறுதி ஆட்டத்தில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்ததினுலேயே இவர்கள் உடனடியாக நாடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உலகக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இலங்கை மொத்தம் எட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு தென்னுபிரிக்காவையும், சிம்பாப்வேயையும் வென்றது. இந்தியாவுடனுன ஆட்டம் மழைகாரணமாக வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது. மற்றைய ஐந்து போட்டிகளிலும் அது தோல்வி அடைந்தது. (வி)

---

## கிரிக்கெட் உலகிலிருந்து வெங்சாகர் ஓய்வுபெறுகிறுர்

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னுள் கப்டனும் நடுவரிசை ஆட்டக்காரருமான திலீப் வெங்சாகர் முதற்தர மற்றும் சர்வதேச கிரிக்கெட் பந்தயங்களில் விளையாடுவதிலிருந்து தாம் ஓய்வுபெறப் போவதாக அறிவித்துள்ளார்.

அண்மையில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற போட்டிகளின்போது தமது விளையாட்டுத்திறன் சரிவர வெளிப்படாதுபோனதால் இவ்வாறு முடிவு செய்திருப்பதாக அவர் செய்தியாளரிடையே நேற்றுமுன்தினம் பம்பாயில் தெரிவித்துள்ளார்.

1976ம் ஆண்டு நியூஸிலாந்துக்கு எதிராக விளையாட ஆரம்பித்ததிலிருந்து 116 'டெஸ்ற்' பந்தயங்களில் விளையாடிய திலீப் வெங்சாகர் 17 சதங்கள் உட்பட 6,868 ரன்கள் குவித்திருக்கிறுர்.

35 வயதான இவர் சுனில் கவாஸ்கருக்கு அடுத்தபடியாக அதிக ரன்கள் குவித்த பெருமை பெறுகிறுர், (கே)

---

## தவக்கால நற்சிந்தனை

இந்த உலகிலே நாம் விரும்புவது இன்பசுகமே. துன்பதுயரம் என்றுல் நாம் அதனை வெறுக்கிறோம். ஆனுல் அந்த துன்ப துயரம் தான் நமக்கு மறு உலகில் முடிவில்லாத இன்பசுகத்தை அளிக்கும் என்பதை மறந்து வாழ்கிறோம். எனவே நாம் இலாதார் என்னும் ஏழையை நினைத்து துன்ப துயரங்களைச் சந்தோஷத்தோடு ஏற்றுவாழ்வோம்.

மோ. தார்சீசியஸ்

# விடுதலைப் புலிகள் விவகாரம்;

## தமிழக சட்டசபையில் அமளி துமளி

(சென்னை)

இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்காக நமது மாநில மக்களின் பாதுகாப்பை விட்டுக்கொடுக்க முடியாது. இதேபோல் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளை ஆதரிக்கிறோம் என்பதற்காக ராஜீவ்காந்தி கொலை உட்பட பல கொலைகளை நடத்திய புலிகள் இயக்கத்தை ஆதரிக்கமுடியாது என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று சட்டசபையில் தெரிவித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் பண்ருட்டி இராமச்சந்திரன் பேசும்போது குறுக்கிட்டு பேசிய முதலமைச்சர், பண்ருட்டி இராமச்சந்திரன் இலங்கைத் தமிழர்கள் பற்றி குறிப்பிடும்போது முதலமைச்சர் எழுந்து ராஜீவ் காந்தியை கொலை செய்த விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் அதன் தலைவர் பிரபாகரனையும் பாட்டாளி மக்கள்கட்சியும் அதன் உறுப்பினரான பண்ருட்டி இராமச்சந்திரனும் ஆதரிக்கிறார்களா என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லும்படி கேட்டார்.

இந்த சமயத்தில் பண்ருட்டி இராமச்சந்திரன் இந்த பிரச்னையில் 3 அம்சங்கள் உள்ளடங்கி இருப்பதாக குறிப்பிட்டபோது முதலமைச்சர் முதல் அம்சத்திற்கு பதில் என்ன என்றார். இராமச்சந்திரன்பதில் அளிக்க முற்பட்டபோது அமைச்சர்களும் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் எழுந்து முதல்வரின் கேள்விக்கு உண்டு, இல்லை என்று பதில் அளிக்கும்படி பண்ருட்டி இராமச்சந்திரனை கேட்டார்கள் இதையடுத்து சட்டசபையில் அமளிநிலவியது.

இதன் பின்னர் முதல்வர் எழுந்து, ராஜீவ்காந்தி கொலையால் ஏதோ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த ஓரிருவர் சம்பந்தப்பட்டார்கள் என்று சொல்வதற்கு இல்லை. மாறாக அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரனே இச்செயலில் ஈடுபட்டதாகத் தடயங்களை வைத்து, நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இப்படிப்பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு குற்றவாளியை, அவரது கடுமையான கட்டுப்பாட்டில் இருக்கும் ஒரு இயக்கத்தைப் பாட்டாளி மக்கள் கட்சி ஆதரிப்பது, ராஜீவ் காந்தி கொலையை ஆதரிப்பதற்கு ஒப்பானது என்று குற்றம் சாட்டினார்.

இதற்குப்பதிலளிக்கமுயன்ற திரு. பண்ருட்டி இராமச்சந்திரன்பேசஇயலவில்லை. அவருக்குக்கொடுத்த அவகாசம்முடிவடைந்து விட்டதாக சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா அறிவித்தார். (மா)

### புலிகளை தடைசெய்யவும்

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்ய வேண்டுமென்று தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (மா)

### அன்னை பூபதி நினைவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாளை வெள்ளிக்கிழமை சங்கானை வட்டவைப் பிரதேசத்தில் அன்னை பூபதி நினைவாக காலை 8-00மணி முதல் மாலை 3-00 மணி வரை அடையாள உண்ணா விரதமும், இரவு 7 மணிக்கு பண்டத்தரிப்பு பனிப்புலம் அம்மன் கோவிலடியில் நினைவஞ்சலிக்கூட்டமும் அதனைத்தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

### இன்று கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்களுக்கு இதுவரை காலமும் எதுவித நிவாரணமும் வழங்கப்படாததைக் கண்டித்து, கடற்றொழிலாளர் இன்று காலை 8-00 மணிக்கு மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்துகின்றனர்,

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய முன்றலிலிருந்து ஊர்வலம் ஆரம்பிக்கும் இப்பேரணியினர், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குச் சென்று கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளிப்பார்கள். 56)

### இலங்கை திரும்ப

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் பாதுகாப்பு இன்னும் சீரடையவில்லையென்றும் இதற்கு காரணம் கூறப்பட்டுள்ளது.

நாடு திரும்பும் அகதிகட்கு எவ்வகையான பாதுகாப்பு இலங்கையில் வழங்கப்படுகின்றன என்பது குறித்து இந்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது. (கே)

## தமிழ் அகதிகளுக்கு மீண்டும் காலக்கெடு

(சென்னை)

அகதிகள் முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கள் பெயர்களை உடனடியாகபதிவு செய்து கொள்ளவேண்டுமென்று தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறது.

எதிர்வரும் 27ம் திகதிக்குள் இவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவேண்டுமென்றும் இல்லாவிடில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் முகாம்களில் தங்கியிருக்கும் அனைத்து அகதிகளையும் திரும்ப அழைத்துக்கொள்ள இலங்கை அரசு முன்வந்திருக்கிறதென்றும் இவர்களைத் திருப்பி அனுப்புவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டன என்றும் நேற்று சென்னையில்வெளியான அரசு அறிவிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாய்க்கடிக்கு இலக்காகி மருத்துவபீட மாணவி மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆறு மாதத்திற்கு முன்னர் கொழும்பில் நாய் கடித்து பின்னர் உரிய கவனம் செலுத்தாது இங்கு வந்து பல்கலைக்கழகத்தில் கல்விபயின்று கொண்டிருந்த வைத்திய பீட மாணவி ஒருவர் நேற்றுமுன் தினம் யாழ். பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நேற்று மரணமானார்,

தெல்லிப்பளை கொல்லங்கலட்டி கிராம சபை ஒழுங்கையைச் சேர்ந்த செல்வி சி. தர்மவாணி (22 வயது) என்ற மருத்துவபீட மாணவியே அதற்குரிய ஏற்புத்தடுப்பூசி மருந்தினை போடாமல் அதன் பாதிப்பிற்குள்ளாகிய நிலையில் மரணமாகியுள்ளார்.

கடந்த 19 நாட்களுக்குள் விசர்நாய்க்கடியினால் மூவர் மரணமாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (56)

## உலக கிண்ண கிரிக்கெட் ஆஸி. பாக். சிம்பாவே வெற்றி

[மெல்போன்]

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி தொடரில் நேற்று நடைபெற்ற 3 போட்டிகளில் சிம்பாவே தனது முதலாவது வெற்றியை பெற்றதுடன் பாகிஸ்தான் அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றதுடன் இந்த வாய்ப்பை மே.இந்திய அணி இழந்தது.

இங்கிலாந்திற்கும் சிம்பாவேக்கும் இடையிலான போட்டியில் சிம்பாவே 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ஸ்கோர் விபரம்; சிம்பாவே 134 ஓட்டம். இங்கிலாந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டம்.

பாகிஸ்தானுக்கும் நியூஸிலாந்துக்குமிடையிலான போட்டியில் பாகிஸ்தான் 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. ஸ்கோர் விபரம் நியூஸிலாந்து 48.2 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 166 ஓட்டம். பாகிஸ்தான் 44.4 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 167 ஓட்டம் [ரமேஸ்ராஜா ஆட்டமிழக்காமல் 119 ஓட்டம்]

ஆஸ்திரேலியாவுக்கும் மே. இந்தியாவுக்குமிடையிலான போட்டியில் ஆஸ்திரேலியா 56 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ஸ்கோர் விபரம்: ஆஸ்திரேலியா 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 216 ஓட்டம். மே. இந்தியா 42.4 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்கள்.

சனிக்கிழமை நடைபெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் நியூஸிலாந்தை எதிர்த்து பாகிஸ்தானும் ஞாயிற்றுக்கிழமை தெ. ஆபிரிக்காவை எதிர்த்து இங்கிலாந்தும் ஆடும். [சி]

### வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணியாற்றி வருகின்றது.

அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டம் ஒவ்வொரு பிரஜைக்கும் நீதி வழங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

### புலிகளை ஆதரித்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவ் காந்தியையும் ஏளனம் செய்யும் கோஷங்களும் எழுப்பப்பட்டதாக தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் நேற்று சட்ட சபையில் தெரிவித்தார்.

செங்கை எம். ஜி. ஆர். மாவட்டத்தில் ஒரு சிறை அதிகாரி விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தகைதிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார் என்றும் அந்த சிறையதிகாரி குடியரசு தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றி வைக்கவில்லையென்றும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டினார். (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/81.

## உயர் அதிகாரி உட்பட 28 படையினர் பலி

(கொழும்பு)

மணலாறுமாவட்டம் கொக்குத் தொடுவாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற புலிகளின் தாக்குதலில் ஒரு உயர் அதிகாரி உட்பட 28 படையினர் கொல்லப்பட்டு, 15 படையினர் படுகாயமடைந்ததாக அரசு அறிவித்துள்ளது

இந்த மோதலில் முதல் தடவையாக பின் உதைப்பற்ற பீரங்கி ஒன்றும் புலிகளால் கைப்பற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது,

புலிகள் தரப்பில் 11வேங்கைகள் களப்பலியாகினர். (சி)

## 7,421 சிங்கள இளைஞர் காவலிலிருந்து விடுதலை

(கொழும்பு)

கடந்த இரண்டு வருடங்களாக, பல்வேறு தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 7,421 சிங்கள இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகவலை பிரிகேடியர் ஆனந்த வீரரட்ண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இவர்கள் அனைவரும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டுள்ளனர் இவர்களுக்காக அரசு 11 கோடி ரூபாவைச் செலவிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (சி)

### உதைபந்தாட்டம்: இன்று சாம்பியன் மோதல்

(யாழ்ப்பாணம்)

அமரர் டாக்டர் ஜே. பீ. ஸி. பிலிப் ஞாபகார்த்தக் கேடயத்துக்கான உதைபந்தாட்டச் சாம்பியன் மோதல் இன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது.

குருநகர் பாடும் மீன் கழகமும், நாவாந்துறை சென். மேரிஸ் கழகமும் கலந்து கொள்ளும் மேற்படி சாம்பியன் மோதலுக்கு, யாழ். ஆயர் கலாநிதி பி. தியோகுப்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிறார். (வி)

### நிறவெறிக்கொள்கைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் டி. கிளாக்கிற்கு ஆதரவாக மிகப் பெருமளவில் வாக்குகள் கிடைத்துள்ளன.

சிறுபான்மை வெள்ளையர் மட்டுமே பங்கு கொண்ட கருத்துக் கணிப்பெடுப்பின் முடிவுகள் வெளியாகியுள்ளன. இதன்படி அதிபரின் சீர்திருத்தங்களுக்கு ஆதரவாக 69 வீதம் கிடைத்துள்ளது.

இதையடுத்து தெ.ஆபிரிக்க கிரிக்கெட் அணி தொடர்ந்தும் அரையிறுதி ஆட்டத்தில் பங்கு பற்றக்கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. (சி)

### இராணுவ தளபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது வேறும் முக்கிய படைத்தளபதிகளும் மணலாறில் தற்போது நடைபெறும் 'ஒபரேஷன் கயபாற' படை நடவடிக்கை அதிகாரிகளும் முக்கிய சில பகுதிகளை பார்வையிட்டனர்.

இப்பகுதியில் தற்போது ஆறுவது இராணுவ நடவடிக்கை இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### 22 ஆட்லறி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி இராணுவ முகாமில்யிருந்து வடமராட்சியை நோக்கி இருபத்திரண்டு ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன,

இச்ஷெல்கள் வடமராட்சியில் மயிலியதனை, ஆலடி, ஆதிகோவிலடி, வல்வைச்சந்தி நெடியகாட்டுப் பிள்ளையார் கோவிலடி, வல்வெட்டி போன்ற இடங்களில் விழுந்து வெடித்ததில் பல வீடுகள் சேதமானதுடன் பல பொது மக்கள் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மந்திகை அரசினர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்,

இதேநேரம் கடலில் தரித்துள்ள கடற்படை கப்பல்கள் மக்கள் குடியிருப்புகளை நோக்கித் தாக்குதலை நடாத்தினர். (51—56)

### பஞ்சாப்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆளுநர் உரையாற்றிக்கொண்டிருந்தபோது இடையிடையே மீண்டும் மீண்டும் கூச்சல் போட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஆளும் கட்சியின் அமைச்சர்கள் இருவர் சென்று கன்னத்தில் அறைந்தார்கள். இதன் பின்னர் ஆளுநர் உரை தொடர்ந்து இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (மா)

### தனியார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு நகர்நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸை முஸ்லிம் ஊர்காவற்படையினர் நிறுத்தி பஸ்சினுள் கைக்குண்டு வீசியதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் காத்தான்குடியில் நடைபெற்ற சம்பவம் ஒன்றிற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக முஸ்லிம் ஊர்காவற்படையினர் இதனை செய்ததாகவும் கைக்குண்டு வீசியதன் பின்னர் அவர்கள் தப்பியோடிவிட்டதாகவும் கூறப்படுகிறது, (மா-சி)

### தெரிவுக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான இறுதிச் சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளதால் இச்சந்தர்ப்பத்தை அரசு தவறவிடக்கூடாது. இதற்கு முன்னோடியாக அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணம் சென்று புலிகளின் கருத்தை அறியலாம்.

சகல கட்சிகளினதும் ஆதரவை தெரிவுக்குழு பெற்றுள்ளதால் வடபகுதி சென்று புலிகளை சந்திக்கவேண்டும் என்றும்அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (சி)

### மணலாறில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தெறியப்பட்டதுடன் நவீன ரகத்துப்பாக்கிகள் –2, 50 கலிபர் துப்பாக்கி ரவைகள் 700 நடுத்தர ரவைகள் 300, புகைக்குண்டு 1 ஆகிய ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று விடுதலைப் புலிகள் தரப்பில் இளம்சேரலாதன் (கனகசபை-கணேஷ்குமார், திருமலை), பவளராசன் (இரத்தினம் ஞானப்பிரகாசம்-பேசாலை) ஆகிய இரு வீர வேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்கள், நேற்றுமுன்தின மோதலில் 11 வீரவேங்கைகள் வீரச்சாவை தழுவிக்கொண்டார்கள். இவர்கள் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்போதும் இப்பகுதிகளில் மிக உக்கிரமோதல்கள் நடைபெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [வி]